ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

09.07.2026

1. ஞானபண்டிதனே வேலவா போற்றி
ஞாலமதை காத்திடும் முருகா போற்றி
வானவர்களோடு வடிவேலன் நீயும்
வரம் தரவே ஆறுமுக அரங்கன் யானும்

2. யானும் இந்த அவதாரம் புரிந்து
உயிர் காக்கும் மாதரும சேவையை
ஞானக்குடில் படைத்து நடத்தியே
ஞான ஜோதியாக கலந்து அருளவே

3. அருளவே என் பீடம் வருவோர்க்கு
ஆறுமுகனோடு அரங்கன் எந்தனின்
வரமும் கிட்டும் எனக் கூறியே
வழங்குவேன் பராபவ மிதுன திங்கள்

4. திங்களில் சதுர் குருவார அருளாசி
தேசமே நலம் பெற உரைப்பேன்
ஓங்கார ஞான மகா சூட்சுமம்
உங்களுக்கு அறிய வேண்டுமாயின்

5. வேண்டியே அரங்கனென் பீடம்
வினவிட அணுகி வந்துமே
கண்டுமே சரவண சோதியை
கண்ணீர் மல்க மனமுருகி வேண்ட

6. வேண்டியே வேலவன் அருளும்
வினை நீக்கும் அருளமுதுதனை
உண்டுமே மகிழ்ச்சி கொண்டு
உயர்வான என் அன்னதானத்தில்

7. அன்னதானத்தில் பொருளை வழங்கி
அபயமென சரணாகதி தன்னை
மண்ணுலகில் உலகோர் கண்டிட
மாதவசி என்சீடன் ராம்குமார் கரம்பட

8. கரம்பட மகா தீட்சை ஏற்று
காலை மாலை நிசி என வாழ்வில்

வரம் தா என ஞானிகள் பூசை
வாழ்வில் மக்கள் தொடர

9. தொடர தொடரும் வினை விலகி
தெளிவு ஞானத் திடமோடு
இடரை வெல்லும் ஓங்காரம்
எல்லா சூட்சுமமும் விளங்கி

10. விளங்கியே தரும ஞானவானாக
வேலவன் ஆட்கொண்டு வழிநடத்தும்
களங்கமற்ற கண்ணியவான்களாக
கலியினில் சிறந்து பிறவிப் பிணி தொடரா

11. தொடரா வண்ணம் நிலை கூடி
தேசிகன் என் வழி ஞானிகளாவர்
இடரை வென்று எதிலும் வெற்றி
இலகுவாய் கண்டு திளைப்பர் அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி